

கொழும்பு, கொம்பனித்தெரு

சைவ முன்னேற்றச் சங்கம்

# "தொண்டரணி"

முதலாவது ஆண்டு நிறைவு விழா

சிறப்பிதழ்

131, சியூ வீதி, கொழும்பு 2.

I - 8 - 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அதிகம் பயிரிட அதிக தண்ணீர்!

மணித்தியாலத்திற்கு 10,000 கலன் தண்ணீரை நீங்கள் விரும்பும் இடத்திலிருந்து

ஓர்

**WALKER-WOLSELEY**

## நீர்ப்பாசன பம்ப் மூலம் பெறலாம்



(2" பெற்றோல்)

(மண்ணெண்ணெய் பம்ப்)

பிரசித்திபெற்ற, நம்பிக்கையான வாக்கர், வூல்ஸி நீர்ப்பாசனம் மற்றும் சகல நீர் இறைப்பு வேலைகளுக்கான பெற்றோல் / மண்ணெண்ணெய் எஞ்ஜின் உள்ள பம்ப் இப்பொழுது இலங்கையில் வாக்கர் இன்டஸ்ட்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டில் தயாரிக்கப்படுகிறது.

★ மணித்தியாலத்திற்கு 10,000 கலன்கள் ★ இயக்கச்செலவு குறைவு

★ இலகுவான பராமரிப்பு

WI ஓர் வாக்கர் இன்டஸ்ட்ரீஸ் தயாரிப்பு

இந்தப்பம்பில் ஏற்படக்கூடிய பழுதுகள் செப்பனிட்டு பாதுகாப்பு சேவைகளும் அளிக்கப்படும் என உத்தரவாதம் பெற்றது

## வாக்கர் சன்ஸ் அன் கம்பெனி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸோனி 2R-29

## பாக்கெட் ட்ரான்சிஸ்டர் ரேடியோ

## விலை ரூ. 110/-

ஸோனி – உன்னத தொனி ஈர்ப்பும்,
தொனிச் சிறப்பும் கொண்டது.

### சீடில்ஸ் சினிரேடியோ

9, 10 கொன்சிஸ்ட்டரிக் கட்டிடம், பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
கிளைகள்: கண்டி, யாழ்ப்பாணம், அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி, கம்பஹா.

தொலைபேசி: 27311


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ELEPHANT
BR·AND
SOFT
DRINKS
are
the best

ELEPHANT HOUSE

CEYLON COLD STORES LIMITED
COLOMBO — KANDY — TRINCOMALEE

*With Compliments*
*of*

ASBESTOS CEMENT INDUSTRIES LTD.

Manufacturers of "ELEPHANT"

ASBESTOS – CEMENT PRODUCTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

கொழும்பு

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# "தொண்டரணி"

தொடர்பு { எங்கள் தொ. அ - 2. / தங்கள்.................

131, இயூ வீதி,
கொழும்பு 2.
1 - 8 - 1970

தோற்றம்:
21 – 7 – 69

காவலர்கள்:
ஸ்ரீ பவன் ஸ்ரீ ஸ்கந்த ராஜா
B.Sc. Hons. Lond., Ph. D. Cantab.

கு. குருசாமி
B.A. Hons. (Lond)

ம.சி. சிதம்பரப்பிள்ளை

சி. திருநாவுக்கரசு
சைவ இளவல்

சற்சொரூபவதி நாதன்
B. Sc.

★

தளபதி:
க. பாலசுப்பிரமணியம்

தானைத் தலைவர்:
ச. கனகசபாபதி

அணிச் செயலாளர்:
வ.இ. இராமநாதன்

அணிப் பொருளாளர்:
இந்திராணி கண்ணலிங்கம்

★

## வரவேற்புரை

பேரன்புமிக்க சைவப் பெருமக்களே!

பரந்து விரிந்து நிற்கும் எமது சமயத்தின் சீரிய பண்பாட்டை மக்களிடத்து வளர்க்கும் நன்னோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஓர் அங்கமாக அமைந்த இத் "தொண்டரணியின்" முதலாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு வருகைதந்த உங்கள் அனைவரையும் இருகரம் கூப்பி சிரம் தாழ்த்தி வருக! வருக!! என அகமும் முகமும் மலர கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத் தொண்டரணியின் சார்பில் அன்புடன் வரவேற்கின்றேன்.

"குணம் நாடி குற்றமும் நாடி அவற்றின்
மிகை நாடி மிக்க கொளல்"


வணக்கம்

தங்கள் சேவையில் என்றும்,

வ.இ. இராமநாதன்
(கௌரவ அணிச் செயலாளர்)

கடமை ★ கண்ணியம் ★ கட்டுப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# வாழ்த்துப்பா

அருமறையும் ஆகமமும் ஐயனடி யார்தந்
திருமுறையுஞ் சொல்லுந் திருவார் — பெருநெறியே
கொண்டு புதுமைவழிக் கோடாது வாழியநந்
தொண்டரணி செய்யுந் தொழும்பு.

உலகத் தாருயிர் அலகிலா தியற்றிய
நலங்கடி யிருவினை மலங்கெடற் பொருட்டு
நிறைவுறு கருணையா லிறைவ னருளிய
மறையா கமந்திரு முறையொடு சைவ
சித்தாந்த வுட்பொருள் வித்தாந்த மறிந்திருட்
பித்த மொழியவும் ; சித்தந் தெளியவும் ;
பன்னுமிவ் வுலகிடைத் துன்னுமெப் போகமும்
மன்னு தன்றியு மின்னு தென்றும்
'உயிர்க்குறு துணையின செயிர்த்தலை பிரியா
துயிர்ப்புறு முயிரல, வுயிர்க்குயி ரானதோ
ரிறைவனே' யென்றும் நிறைமனத் துணரவும் ;
அத்துணைப் பரம்பொருட் கெத்திறம் படரினும்
நித்தமு மன்பொடு சுத்தமா யியற்றும்
தொண்டணி யுடையதத் தொண்டரே யணியரென்
றெண்டரு சிந்தையிற் கொண்டறஞ் செய்யவும்
இம்பரோர் தொண்டு நம்புநர்க் கருளும்
கொம்பனித் தெருவளர் நம்ப னுரடித்
தொண்டணி யாளராந் தொண்ட ரணியினர்
அண்டரு மேத்த வெண்டிசை
மண்டுநற் புகழ்நிறீஇ மகிழ்ந்துவா ழியரே.

பண்டுதமிழ் பாடிப் பரனடிக்குத் தொண்டுசெய்த
தொண்ட ரடித்தொண்டுத் தொண்டரணி — கொண்ட
சிவம்பெருக்கு மோர்பணியின் செம்மைநலம் பேணித்
தவம் பெருக்கி வாழ்க தழைத்து.

— திரு. தி. நவநீதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ministry of Posts and Telecommunications
Overseas Telecommunications Service Building
Duke Street
Colombo 1
Ceylon
*Telephone: 29567-29112*

மாண்புமிகு
## தபால் தந்தி அமைச்சர்
அவர்களின்
# ஆசிச்செய்தி



கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத் "தொண்டரணி" யின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவின் சிறப்பு மலருக்கு செய்தி அளிப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

தலைநகரில் சிவநெறிக்கும், செந்தமிழுக்கும் பணியாற்றும் தலைசிறந்த சங்கங்களுள் கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கமும் ஒன்ருகும்.

"நால்வர்" காட்டிய வழியிலே நாமும் எங்கள் குழந்தைகளும் சென்று வாழவேண்டும். சைவத்தை வளர்ப்பதற்கும், மக்களுக்குத் தொண்டு செய்வதற்கும், "தொண்டரணி" என்னும் இயக்கத்தை ஆரம்பித்து இருக்கின்றனர். இது ஒரு சிறந்த நோக்கமாகும்.

இத் தூய நோக்கத்தைக் கொண்டு பணியாற்றும் கொம்பனித்தெரு "சைவ முன்னேற்றச் சங்கமும், அதன் அங்கமாகிய தொண்டரணியும்" சிறந்தோங்க எனது நல்லாசிகள்.

வாழ்க நாடு! வாழ்க ஒற்றுமை!! வாழ்க மக்கள்!!!

வணக்கம்.

செ. குமாரசூரியர்
(மாண்புமிகு கௌரவ தபால் தந்தி அமைச்சர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொடரட்டும் உங்கள் தொண்டு!!

"மெய்யராகிப் பொய்யை நீக்கி, வேதனையைத் துறந்து, செய்யரானார் சிந்தையானே!"
என்ற ஞானசம்பந்தர் திருவாக்கிற்கமைய, அதே குணலங்காரமுடைய உறுப்பினர்களைக் கொண்ட கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் "தொண்டரணி"யுடன் சிறியேனும் இணைபட்டிருப்பது என் பெரும் வாய்ப்பு.
மேற் கூறிய தேவாரடியின் ஒரு எழுத்தின் மகிமையும் குன்றாது, சமயத் தொண்டையே சிரசில் தாங்கிப் பணியாற்றும் "தொண்டரணி" வாழ்க பல்லாண்டு!

வணக்கம்.

கலாநிதி ஸ்ரீ பவன் ஸ்ரீஸ்கந்த ராஜா.
(B. Sc. Hons, Lond., Ph. D. Cantab)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பான்ஸ் பிளேஸ்

1.8.1970

தொலைபேசி : 94935

உ

சிவமயம்

முருகன் துணை

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத் "தொண்டரணி" தங்கள் முதலாண்டு விழாவின் பொருட்டு ஒரு சிறப்பிதழ் வெளியிட எண்ணியிருப்பதாக அறிவித்தார்கள். அந்தச் சிறப்பு மலருக்கு எனது மனமார்ந்த அன்புநிறைந்த இந்த நல்லுரையை மகிழ்ச்சியுடன் நான் அனுப்புகின்றேன்.

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் ஆற்றிவரும் அரும் பெரும் தர்மத் தொண்டினை நான் பலமுறை நேரிற் கண்டு மகிழ்ச்சியுடன் பெருமிதமடைந்தேன். "தொண்டரணி" இவ்வரிய சங்கத்தின் முக்கிய அம்சமாகும். இந்து நூல்களில் அதாவது வேத ஆகம புராண நூல்களிலும், மற்றும் பல அறநூல்களிலும் உள்ள அரிய திவ்விய உண்மைகளையும், கருத்துக்களையும் பிள்ளைகளுக்கு சிறு பராயந் தொடங்கி புகட்டி வைப்பது இந்து சமூகத்திற்கு ஓர் அரும் சேவையாகும்.

இத்தொண்டினை நன்குணர்ந்து இத்தொண்டரணி ஆர்வத்துடனும், இடைவிடா முயற்சியுடனும் தன் நலங்கருதாது சைவ வாலிபர் மத்தியில் பணி செய்து வருகின்றது.

"மாசு மறுவற்ற தெய்வீகப்பற்று, சகோதரத்துவம், கண்ணியம், கட்டுப்பாடு முதலியனவற்றை" வளர்ப்பதை முன்னேக்காகக்கொண்டு இத் "தொண்டரணி" பணி செய்து வருகின்றது. இத்தகைய "தொண்டரணிகள்" கொழும்பு மாநகரத்தோடு நில்லாது இந்துக்கள் வாழும் மற்றும் ஒவ்வொரு நகரிலும், கிராமங்களிலும் பரவி வரவேண்டும். இத்தொண்டரணி மூலமாகவே சமயத்தையும், இந்து சமயப்பண்பினையும், ஆசாரத்தையும் காத்து, வளர்த்துப் பரப்பமுடியும்.

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத் "தொண்டரணி" வாழ்க ! அவர்கள் பணி சிறந்தோங்குக !

வணக்கம்.

செ. இரங்கநாதன் Q. C.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# "தொண்டரணி"

| | |
|---|---|
| தளபதி : | திரு. க. பாலசுப்பிரமணியம் |
| தானைத் தலைவர் : | ,, ச. கனகசபாபதி |

### அணித் தலைவர்கள்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அணி :**

திரு. வ.இ. இராமநாதன்
,, வி. அம்பலவாணபிள்ளை
,, த. திருவருட்செல்வன்
,, சோ. ஞானலிங்கம்
,, சு. உமாமகேஸ்வரன்
,, தி. அருணாசலம்

**சுவாமி விபுலானந்தர் அணி :**

திரு. தி. செல்லத்துரை
,, பெ. பூமிநாதன்
,, ச. ஆனந்ததியாகர்
,, தி. நவநீதன்
,, வே. பெரியசாமி

**சுவாமி விவேகானந்தர் அணி :**

திரு. ச.மு. விவேகானந்தன்
,, சி. இராமலிங்கம்
,, ந. ஜெயராஜா
,, பெ. நாகநாதன்
,, ஆ. சிவராம்
,, சி. செல்வநாதன்
,, மு. கந்தவனம்

**அன்னை சாரதாதேவி அணி :**

செல்வி. இந்திராணி கண்ணலிங்கம்
,, பாலரஞ்சனி தம்பித்துரை
,, திருச்செல்வம் பெருமாள்
,, புவனேஸ்வரி கந்தையா
,, ராஜேஸ்வரி ஸ்ரீரங்கம்
,, இராஜேஸ்வரி இராஜரட்ணம்

**அன்னை கஸ்தூரிபாய் அணி :**

செல்வி. முத்துலட்சுமி பெருமாள்
,, சுப்புலட்சுமி ஸ்ரீரங்கம்
,, லோகேஸ்வரி இராயேந்திரராஜ்
,, ராஜேஸ்வரி கந்தையா
,, ஜெயராணி சோமசுந்தரம்
,, குமாரி சந்திரா இராஜரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "தொண்டுக்கு ஓர் தொண்டரணி"

ம. சி. சிதம்பரப்பிள்ளை
(தொண்டரணிக் காவலர்)

உலகிலே பெரியது எது? என்று முருகப்பெருமான் ஒரு முறை ஔவையாரைக் கேட்டார். பெரியது இப்புவனம். இப்புவனத்திலும் பெரியது உண்டு. அப்பொருள் பண்டும் என்றும் இன்றும் உள்ள இறைவன். ஆனால் இவ்இறைவனோ தொண்டருள்ளத் தொடுக்கம். ஆகவே தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே — எனக் கூறினார்.

ஊனினை உருக்கும் தேனினை நிகர்த்த திருவாசகம் தந்த மணிவாசகப்பெருமான், "அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்" என்று வேண்டுகின்றார். அடியார்களுக்கெல்லாம் அடியேன் எனப் பல முறை இரந்து நிற்கின்றார் ஆலாலசுந்தரர். இவ்வாறு இறைவனுடைய தொண்டுக்கு ஆட்பட்டவர்கள் இறைவனுடன் ஒப்பிட்டு, வழிபடக்கூடியவர்கள் என்பதனை அறிகின்றோம்.

ஆணவமுனைப்பினால் மயக்குறும் மக்கள் நடுவில் "தொண்டரணி" என்ற பேரரசை வகுத்து, சேவைநலம் பாராட்டும் சிறுவர், சிறுமியரைத்திரட்டி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்ற வரம்புகளால் வேலியிட்டு, ஆக்கவேலைகள் பல ஆற்றத்திட்டமிட்டு, ஆற்றலுக்கேற்றவாறு அமைதியாக, ஆடம்பரமற்ற முறையில் இயங்கிவரும் — கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத் தொண்டரணியின் காவலரில், அடியேனும் ஒருவன் என்று கூறுவதில் உண்மையில் மிகவும் பெருமைப் படுகின்றேன்.

சத்திரமண்டலத்தில் அமெரிக்க வீரர்கள் காலடி வைத்த அதே பொன்னாளில் எங்கள் இளஞ்சிறார்களும் "தொண்டரணி" ஒன்றினைத் தோற்றுவித்தனர். இந்தப்பெரிய ஒருமைப்பாடு உள்ளிருந்து இயக்கும் சக்தி ஒன்றினை எமக்கு அறிவிக்கின்றதல்லவா?

தேனினைச் சொரிந்து புறம் புறம்திரிந்த செல்வமாகியஎம்மிறைவனுடைய கிருபா கடாட்சத்தினால், எமது சிறார்களுக்கெதிராக மலை போன்று வருகின்ற இடர்கள் யாவும் பரிதிமுன் பனி போலாகி வருகின்றன.

வாழ்க்கை என்ன? எவ்வாறு வாழ்வது? எவருக்காக வாழ்வது? நல்வாழ்வு என்றால் என்ன? என்ற இச் சிக்கலான கேள்விகளுக்கு எங்கள் தொண்டரணித் தோழர்கள், தமது பல்முனை இயக்கங்களால் விடை கொடுத்த வண்ணமிருந்து வருகின்றனர்.

நொந்து, வாடி, மெலிந்து, வாழ்க்கையில் வெறுப்புத்தட்டும் ஒருவருக்கு, உற்சாகம் ஊட்டி, தென்பு கொடுத்து, புது வாழ்வு அளித்துப் புது மனிதனுக்கும் புனிதப் பணியில் முன்னணியில் எங்கள் தொண்டரணியினர் இருந்து வருகின்றனர்.

சைவ நெறி, சைவ ஆசாரம், ஒழுக்கம் முதலிய நற்பண்புகளைக் கைக் கொள்ளாதிருத்தலினாலும், லௌகீக வாழ்வில் மக்கள் மயங்கி இருத்தலினாலும், சைவ மக்களாகிய நாம் சமூகத்தில் பின் தங்கி இருக்கின்றோம் என்பதனைச் சைவ முன்னேற்றச் சங்கத் தொண்டரணியினர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக எடுத்து உரைத்துக் கொண்டு வருகின்றனர். சைவ வாழ்வு இதுதான் என்று வாழ்ந்து காட்டி வருகின்றனர்!

நாவலர் ஐயா வாழ்ந்து காட்டிய நால்வர் நெறியையே, தொண்டரணியினர் தங்கள் குறிக்கோளாக அமைத்து ஒழுகி வருகின்றனர். திருமறைதந்த திருநாவுக்கரசு நாயனார் தமது தொண்டுகள் யாவும் கள்ளத் தொண்டுகளாக இருக்கின்றனவே என்பதனை, தனது உள்மனம் அறிந்து விட்டதே என எண்ணித் தமது விலா எலும்புமுறிய ஒருமுறை சிரித்து விட்டாராம்! எனவே தான் — எம் தொண்டுகளும் உண்மைத் தொண்டாக இருக்கவேண்டும். தனி ஒருவன் முன்னேற, அவனைச் சார்ந்த சமூகமும் தானாகவே முன்னேறும் என்ற தத்துவப்படி, தொண்டரணியினர் பணிபுரிகின்றனர்.

இத்தொண்டரணியில் அங்கத்தவர்களாகச் சேர்ந்த அத்தனை பேரும், இத்தரணியில் எடுத்த பிறவியின் பயனைப் பெற்றவர்கள் என்றால் மிகையாகாது! சைவ சமயத்தில், தமிழ் பேசும் சைவனாகப் பிறப்பது மிகவும் அரிது! அப்படிப் பிறந்தும், சைவ வாழ்வை அனுசரிப்பது அரிது! அவ்விதம் அனுசரித்தும், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மந்திரப்படி, தொண்டரணியில் அங்கத்தவராக இருப்பது அரிதினும் அரிது! அப்படித் தொண்டர்களாக இருந்துவிட்டால், இதனைவிட வேண்டத்தக்கது யாதுளது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, கொம்பனித்தெரு

# "தொண்

## முதலாவது ஆண்

தலைவர். திரு. செ. இரங்கநாதன் Q. C. அவர்கள்

நிகழ்ச்சி

| | | |
|---|---|---|
| 7.00 — 7.10 : | திருவிளக்கேற்றல் | |
| 7.10 — 7.15 : | திருமுறைஓதல் - | திரு. வே. பெரியசாமி அவர்கள் (கௌரவ சமயச் செயலாளர்) |
| 7.15 — 7.25 : | வரவேற்புரை - | திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் (கௌரவ பொதுச் செயலாளர்) |
| 7.25 — 7.40 : | தலைமைப்பேருரை - | திரு. செ. இரங்கநாதன் Q.C. அவர்கள் |
| 7.40 — 8.00 : | வாழ்த்துரை - | மாண்புமிகு அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் அவர்கள் |
| 8.00 — 8.10 : | ஆண்டு அறிக்கை வாசித்தல் - | திரு. வ. இ. இராமநாதன் அவர்கள் (கௌரவ அணிச் செயலாளர்) |
| 8.10 — 8.25 : | சிறப்புரை - | திருமதி. பாலம் லக்ஷமணன் அவர்கள் |
| 8.25 — 8.45 : | சிறப்புரை - | திரு. மு. சிவராசா அவர்கள் (கௌரவ பொதுச் செயலாளர்-விவேகானந்த சபை) |

செல்வி. பெ. முத்துலட்சுமி
செல்வி. இ. லோகேஸ்வரி
(கலை நிர்வாகம்)

131, கியூ
கொழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ முன்னேற்றச் சங்கம்

# ...டராணி"

## ...ந் நிறைவு விழா

பிரதம அதிதி. மாண்புமிகு தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் அவர்கள்

...நிரல்

8.45 — 8.55: உரைவிருந்து - "பாரதி கண்ட தேவியர் மூவர்"
(அன்னை சாரதாதேவி அணி - சுவாமி விவேகானந்தர் அணி)

8.55 — 9.15: வில்லிசை - "மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்"
(ஸ்ரீலஸ்ரீ நாவலர் அணி - சுவாமி விபுலானந்தர் அணி)

9.15 — 9.30: உரைச்சித்திரம் - "புதுமைப் பெண்"
(அன்னை கஸ்தூரிபாய் அணி)

9.30 — 10.25: - கலாச்சாரப் படக்காட்சி

இந்திய தூதரக தகவல் பகுதியினரால் காண்பிக்கப்படும் இப் படக்காட்சியில் மதுரை மீனாட்சியம்மன் கோவில், மதுரைக் கலைக்கூடம், மகாவலிபுரம் தஞ்சாவூர்க் கோவில்கள் மற்றும் தென்னிந்திய கலாச்சாரங்களும் காண்பிக்கப்படும்.

10.25 — 10.30: நன்றி நவிலல் - திரு. ச.மு. விவேகானந்தன் அவர்கள்
(கௌரவ உதவி அணிச் செயலாளர்)

...தி,
...2.

தி. செல்லத்துரை
பெ. பூமிநாதன்
(விழா அமைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு
கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம்

# "தொண்டரணி"

## முதலாவது ஆண்டு அறிக்கை
## (21-7-69 — 20-7-70)

### தோற்றம்

கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள் தான் 21-7-69. ஆம் இந்நன்னாள் உலக வரலாற்றிலே கூட என்றும் மறக்க முடியாத ஓர் பொன்னாளாகும். அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவில் மண்டபத்திலே நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் சைவ இளைஞர்கள் மகளிர்கள் மத்தியிலே மாசு மறுவற்ற தெய்வீகப் பற்றையும் சமூகப் பற்றையும் இளம் பிராயத்திலிருந்து ஊக்குவிக்கவும், கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஆகியனவற்றை வளர்க்கும் முகமாகவும் கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் தங்கம் நிகர் கொள்கைக்கு பங்கம் ஏற்படாத ஓர் அங்கமாக "தொண்டரணி" என்ற நாமத்துடன் இப்புனித இயக்கம் எமது சங்கப் பொதுச் செயலாளர் திரு. க.பாலசுப்ரமணியம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

### தாரக மந்திரம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.

### அருட் கட்டளைகள்

தொண்டு செய்க, அன்பு காட்டுக, தர்மம் செய்க, தூய்மை அடைக, தியானம் செய்க, அனுபூதி அடைக, நல்லவராய் வாழ்க, நன்மையைச் செய்க, இகழ்ச்சியைப் பொறுக்க, துன்பத்தைச் சகிக்க.

### அறிமுகம்

இவ்வரலாற்றுச் சிறப்புடைய நன்னாளில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இப்புனித தொண்டரணிக்குரிய விதி முறைகள் வகுக்கப்பட்டு, 23-7-69 புதன்கிழமை மாலை கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்ற சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை விழாவில், மங்கள சுப முகூர்த்தம் அமைந்த இரவு 7.32 மணிக்கு தொண்டர்க்கு அன்பனும் கலியுக வரதனும் திருமுருகன் திருவருளுடன், கதிர்காமயாத்திரிகர் தொண்டர் சபைத் தலைவரும் சைவத் தமிழ்ப் பெரியாருமாகிய உயர் திரு. கேணல் இரா. சபாநாயகம் அவர்களது, ஆசி அறிவுரையுடனும் தொண்டரணிக் காவலர்கள் திருவாளர்கள். கலாநிதி ஸ்ரீ பவன் ஸ்ரீ ஸ்கந்தராஜா, கு. குருசாமி B.A. Hons. (Lond) ம.சி. சிதம்பரப்பிள்ளை, சைவ இளவல் சி. திருநாவுக்கரசு, செல்வி. சற்சொரூபவதி நாதன் B.Sc, ஆகியோர்களின் வாழ்த்துக்களுடன் பொது மக்கள் முன்னிலையில் தொண்டர்களுக்குரிய விசேட அடையாளச் சின்னம் அணிவிக்கப் பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

### அமைப்பு

இத் தொண்டரணி, கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தை தாய்ச் சங்கமாகக் கொண்ட ஓர் இயக்கமாகும். இவ்வணியை தலைமை தாங்கி வழி நடாத்தும் பொறுப்பு தாய்ச் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளருக்கே உரியது. இவர் தொண்டரணியின் தளபதியெனஅழைக்கப்படுவார். இவருக்கு அடுத்த படியாக இவரீது கட்டளைகளை ஏற்று செயல் படுத்தும் பொறுப்பு தாய்ச்சங்கத்தின் கௌரவ உதவிப் பொதுச் செயலாளருக்கே உரியது. இவர் தொண்டரணியின் தானைத் தலைவர் என அழைக்கப்படுவார். இவரின் கீழ் ஐந்து அணிகள் முறையே "ஸ்ரீல ஸ்ரீ நாவலர் அணி" "சுவாமி விபுலானந்தர் அணி" "சுவாமி விவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானந்தர் அணி" அன்னை சாரதாதேவி அணி" "அன்னை கஸ்தூரிபாய் அணி" என்ற நாமத்துடன் இயங்குகின்றன. முன்னைய மூன்று அணிகளில் ஆண் தொண்டர்களும் பின்னைய இரு அணிகளில் பெண் தொண்டர்களும் அங்கம் வகிக்கின்றார்கள். இவ்வைந்து அணிகளையும் வழி நடத்துபவர்கள் அணித் தலைவர்கள் என அழைக்கப்படுவார்கள். இவ்வணித்தலைவர்கள் ஐவருள் ஒருவர் அணிச் செயலாளராயும் ஒருவர் அணிப் பொருளாளராயும் மற்றும் மூவர் இவர்களுக்கு உதவியாளராயும் கடமை ஆற்றுவார்கள். ஒவ்வோர் அணியின் கீழும் குறைந்தது பத்துத் தொண்டர்கள் இடம் பெறுவர். மேற்கண்ட பதவி முறைகள் யாவும் அணியின் நிர்வாகத்தை செயல்ப்படுத்தவே அமைக்கப்பட்டது. தொண்டாற்றும்போது அணியைச் சார்ந்த அனைவரும் "தொண்டர்கள்" என அழைக்கப்படுவர்.

### அடையாளச் சின்னம்

பொது மக்கள் அணித் தொண்டர்களை இலகுவில் அறியக் கூடியதாக அணியின் பெயரும் இலச்சினையும் பொறிக்கப்பட்ட விசேஷ அடையாளச் சின்னம் சைவ முன்னேற்றச் சங்கத்தினுல் தொண்டர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொண்டர்கள் கடமையில் ஈடுபட்டிருக்கும் போது மட்டுமே அடையாளச் சின்னத்தையும் இலக்கத்தையும் தங்கள் மேலங்கியின் இடது புறத்தில் அணியும்படி வேண்டப்பட்டுள்ளனர். அணித் தொண்டர்களின் திறமை – சேவை – அனுபவம் பயிற்சிகளுக்கு ஏற்ப தனித் தனி அடையாளச் சின்னங்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அணித் தொண்டர்கள் கடமையின் ஈடுபட்டிருக்கும் போது அணிவதற்கேற்ற விசேஷ அணியுடையும் வழங்குவதற்கு எண்ணியுள்ளோம்.

### நோக்கங்கள்

இத் தொண்டரணியின் பிரதானமான நோக்கங்களாக பின் வருவனவை அமையும். கடந்த ஆண்டில் இந் நோக்கங்கள் பலவற்றை செயல்படுத்தியுள்ளோம்.

(அ) சமய விதிமுறைகளுக்கு அமைந்து ஒழுகுதல்.

(ஆ) தாய்ச் சங்கத்திஞல் கொண்டாடப்படும் குருபூசைகள் - விழாக்கள் மகாநாடுகள், சங்கம் மேற்கொள்ளும் சமய சரித்திர கலாச்சார சுற்றுலாக்கள் மற்றும் தாய்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் எந்த வைபவத்திலும் பங்கு கொண்டு அமைதியையும் ஒழுங்கையும் அன்பு வழியில் நிலைநாட்டல்.

(இ) தாய்ச் சங்கத்தின் ஆதரவில்நடைபெற்று வரும் நோன்மதி தின "நால்வர் சமயப் பாடசாலையில்" பிள்ளைகளுக்கு சமயக் கல்வி பயிற்றுவித்தல்.

(ஈ) கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலிலும், மற்றும் சைவ சமய கோவில்கள், சமய ஸ்தாபனங்களில் நடைபெறும் விழாக்களில் எமது அணியின் சேவை கோரப்பட்டால் பங்கு கொள்ளுதல்.

(உ) தாய்ச் சங்கத்தின் அங்கத்தவர்கள் - ஆதரவாளர்கள் ஆகியோரின் குடும்பங்களில் நடைபெறும் நன்மை – தீமைகளில் பங்கு கொண்டு ஆவன செய்தல்.

(ஊ) சிரமதான முகாங்களை ஏற்பாடு செய்தல், சிரமதான இயக்கங்களில் ஈடுபடுதல்.

(எ) சேமிப்பு இயக்கங்களை ஆரம்பித்தல், சேமிப்பு முறைகளை செயற்படுத்தல்.

(ஏ) முதலுதவி, சுகாதாரக் கல்வி பயிற்றுவித்தல்.

(ஐ) இல்ல பஜனை, பிரார்த்தனை கூட்டங்கள முதலியவற்றை செய்தல்.

(ஒ) வறியவர்கள், நோயாளிகள், அங்க குறைவுடையவர்களின் நல் வாழ்வுக்கு உதவும் திட்டங்களை தயார் செய்தலும், செயற்படுத்தலும்.

(ஓ) தமிழ் மொழியின் இலக்கிய, இலக்கண கலாச்சார வளர்ச்சிக்கு உதவும் திட்டங்களை ஆராய்தல், செயற்படுத்தல்.

(ஔ) இவற்றை விட சைவ சமய, தமிழ் மொழி முன்னேற்றத்திற்கு ஏதுவான கருமங்களை சமய விதிமுறைக்கு தமிழ் கலாச்சாரத்திற்கு அமைய செயற்படுத்தல்.

### உறுப்புரிமை

இத் தொண்டரணியில் 21 ஆண் தொண்டர்களும் 11 பெண் தொண்டர்களுமாக மொத்தம் 32 தொண்டர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் யாபேரும் தாய்ச் சங்கத்தின் அங்கத்தவர்களாகவுமுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கூட்டங்கள்

கடந்த ஆண்டில் தொண்டரணியின் 12 மாதாந்தப் பொதுக் கூட்டங்களும், 2 விசேட பொதுக் கூட்டங்களும் ஒரு சிறப்புக் கூட்டமும் நடைபெற்றுள்ளது. மேற்படி கூட்டங்களில் ஆராயப்பட்ட விடயங்கள் யாவும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

### ஆற்றிய தொண்டுகள்

கடந்த ஆண்டில் எம்மால் இயன்ற-பலருக்கும் பயனளிக்கத்தக்க பல வகையில் தொண்டாற்றி வருகின்றோம்.

**(அ) சிரமதானம்:** அகில இலங்கை காந்தி சேவாசங்கத்தின் அன்பு அழைப்பை ஏற்று இரத்மலானையிலுள்ள காந்தி நூற்றாண்டு விழா ஞாபகார்த்த ஆச்சிரமம் அமைப்பதற்கும், அவ் எல்லையை துப்புரவு செய்வதற்கும் எமது தொண்டர்கள் முன்னின்று உழைத்தார்கள். கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் சுற்றுப்புறத்தை சீர் செய்தும் - துப்புரவாக்கியும் – கோவிலின் பின்புற வேலி பேணுவாரற்று கவனியாது சீரிழந்து கிடந்தபோது எமது தொண்டர்கள் மிகவும் குறைந்த பணத்தை பொருட்கள் வாங்குகிவதில் மட்டும் செலவு செய்து மிகுதி வேலைகள் யாவற்றையும் சிரமதானம் மூலம் அப் பின் புற வேலியை சீர் செய்துள்ளார்கள். இச் சிரமதான காலங்களில் தொண்டரணிக் காவலர்களில் ஒருவரான கலாநிதி. ஸ்ரீ பவன் ஸ்ரீ ஸ்கந்தராஜா அவர்கள் தவருது கலந்து தொண்டாற்றியும் எமக்கு ஊக்கமளித்தும் வந்துள்ளார். அவரது சேவை, எமது தொண்டர்களுக்கு முன் மாதிரியாக வழிகாட்டியாக அமைந்துள்ளது. வருங்காலங்களில் பல சிரமதான இயக்கங்களை நாட்டிலுள்ள பல்வேறு சமூக சேவையாளர்களுடன் சென்று நடாத்த விரிவான திட்டங்களை தயார் செய்துள்ளோம்.

**(ஆ) சமயப் பணி:** கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் எமது தாய்ச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட வைபவங்கள் யாவற்றிலும் பங்கு கொண்டு தொண்டாற்றியுள்ளோம், மற்றும் கடந்த மார்கழித் திங்கள் திருவெம்பாவைத் தினங்களில் அதிகாலையில் தாய்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற வீதி பஜனையில் பங்குபற்றி மிகவும் சிறப்பாக நடாத்தினேம். மற்றும் மாதந்தோறும் சைவ சமய இல்லங்கள் தோறும் சென்று இல்ல பஜனைகள் நடாத்தியும், சைவ கோவில்கள் தோறும் பிரார்த்தனை கூட்டங்கள் நடாத்தியும், எமது தொண்டரணியின் நோக்கங்களுக்கமைய எம்மால் இயன்ற சமயப் பணிகளை குறிப்பாக கொம்பனித்தெரு நகரிலும், பிற இடங்களிலும் ஆற்றி வருகின்றோம்.

**(இ) சமூக சேவை:** எமது சங்க அங்கத்தவர்கள் ஆதரவாளர்களின் குடும்பங்களில் நடைபெறும் மங்களகரமான வைபவங்களில் கலந்து ஆவன செய்து உதவி வருகின்றோம். கடந்த ஆண்டில் எமது சங்க அங்கத்தவர்கள் திரு. க. பாலசுப்பிரமணியம், திரு. தி. நாகராசா, திரு. சி. திருநாவுக்கரசு, திரு. எஸ். தம்பிஐயா ஆகியோரின் திருமண வைபவங்களில் கலந்து வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தோம். அது மட்டுமல்லாது எமது அங்கத்தவர் – ஆதரவாளர்களின் குடும்பங்களில் நடைபெறும் மரணச் சடங்குகளில் பங்கு கொண்டு சைவ சமய ஆசாரப்படி மரணச் சடங்குகள் நிறைவேற தேவாரம் திருவாசகம் முதலான பாடல்களைப் பாடி உதவுவதுடன், சிவபதமடைந்தவர்களது குடும்பத்தார்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும்– ஆறுதலையும் தெரிவித்து வருகின்றோம். வருங்காலத்தில் கொழும்பு நகரில் எந்த பகுதியிலும் நடைபெறும் சைவ சமயத்தை சார்ந்தவர்களது குடும்பங்களில் நடைபெறும் மரணச் சடங்குகளில் கலந்து அவ்மரணச் சடங்குகள் யாவும் சைவ சமய ஆசார முறைப்படி நடைபெற உதவும் விரிவான திட்டத்தை செயற்ப் படுத்த ஏற்பாடுகள் செய்துள்ளோம்

**(ஈ) அங்கத்துவ வார விழா:** எமது தாய்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற அங்கத்துவ வாரத்திலும் அதன் விழாவிலும் தொண்டரணி உறுப்பினர் பெரிதும் செயலாற்றியுள்ளார்கள் இதுவரை காலமும் குறிப்பிடத்தக்க தொகையினரை மட்டுமே அங்கத்தவராகக் கொண்ட சைவ முன்னேற்றச் சங்க அங்கத்துவ பட்டியலை முன்னூற்றுக்கு அதிகமான அங்கத்தினர்களாக ஆக்கித் தந்த பெருமையும் தொண்டரணிக்கே உரியது.

**(உ) ஆடிவேல் விழா:** ஆடிவேல் விழாவின் போது ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் இரதத்தின் முன்னல் எம் அணியைச் சார்ந்த தொண்டர்கள் மாலை 6-30 மணியிலிருந்து காலை 5-30 மணிவரை தொடர்பாக முருகப் பெருமானின் பஜனையை முன்னின்று நடாத்தி முருகப் பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானின் திருவருள் பேற்றையும்சைவப்பெருமக்களின் நன் மதிப்பையும் ஆடிவேல் விழா நிர்வாகிகளின் பாராட்டுதலையும் பெற்றனர்.

பிற பணிகள்: மேற் கூறியனவற்றை விட எம்மால் இயன்ற சமயப் பணிகள், சமூகப் பணிகள் யாவற்றையும் குறிப்பாக கொம்பனித்தெரு சைவ மக்களுக்கும், ஏனைய சைவ மக்களுக்கும் இதய சுத்தியுடன் ஆற்றி வருகின்ரும். மேலும் எம் பணிகள் விஸ்தீரணமடைய வருங்காலத்தில் பல திட்டங்களை தயார் செய்து வைத்துள்ளோம். இவைகள் யாவும் அடுத்த ஆண்டில் செயற்படுத்தப் படும் என உறுதி அளிக்கின்ரும்.

## பயிற்சி வகுப்புகள்

மாதந்தோறும் தொண்டர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடாத்தி வருகின்ரும். சமயப் பெரியார்களையும்–மற்றும் கல்வி மான்கள்–சுகாதார அதிகாரிகள் யாபேரையும் அழைப்பித்து தொண்டர்களுக்குரிய கடமைகள் பற்றியும்–கடமை புரியும் காலங்களில் தொண்டர்கள் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் அமைந்து, தம் மத்தியில் சகோதர மனப்பான்மையுடன் சேவையாற்ற வேண்டிய அவசியத்தைப் பற்றியும், தொண்டர்கள் எந்தக் கட்டத்திலும் பொறுமையை இழக்கவோ - உணர்ச்சி வசப்படவோ, ஆத்திரப் படவோ வன் சொற்களைப் பிரயோகிக்கவோ தங்களை ஆளாக்கக்கூடாது என்ற அமுத வாக்குகள் போதிக்கப்படுவதுடன், கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் என்பவற்றை செயல் முறையில் கடைப் பிடிக்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. வருங்காலத்தில் தொண்டர்களுக்கு முதலுதவி–சுகாதாரக் கல்வி வகுப்புகள் நடாத்த விரிவான ஏற்பாடுகள் செய்து வருகின்ரும்.

## சேமிப்பு இயக்கம்

தொண்டரணி உறுப்பினர்கள் யாபேரும் இளம் பிராயத்தில் இருந்து சேமிப்பு முறைகளை பழகி பணத்தை சேமித்து வரவேண்டும் என்ற நோக்கத்துடன் எமது தொண்டர்கள் யாபேருக்கும் இலங்கை தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி பண வைப்பு புஸ்தகம் ஒவ்வொன்றைப் பெற்று தொண்டர்கள் யாபேரும் மாதந்தோறும் தம்மால் இயன்ற பணத்தைத் தங்கள் சொந்த சேமிப்புப் பணமாக சேமித்து வருகின்ருர்கள். இவ் இயக்கம் வருங்காலத்தில் சிறப்பாக தொண்டரணி உறுப்பினர்கள் யாபேருக்கும் உதவக் கூடிய இயக்கமாக அமையும் என்பது உறுதியானது.

## காந்தி நூற்ருண்டு விழா

காந்தி நூற்ருண்டு விழா ஞாபகார்த்தமாக 2—10—69 ல் கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் மேற்படி விழாவை மிகவும் சிறப்பாக கொண்டாடினேம். அன்றைய தினம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை தீண்டாமையை எதிர்த்து எம் தொண்டர்கள் திருவாளர்கள் க. பாலசுப்பிரமணியம், ச. கனகசபாபதி, ச. மு. விவேகானந்தன் ஆகியோர் 12 மணி நேர உண்ணுவிரதத்தை மேற் கொண்டார்கள். அன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை எம் தொண்டர்கள் மேற்படி கோவிலில் சிரமதான வேலைகளை மேற் கொண்டு செய்தார்கள். மாலை 6.30 மணிக்கு நடைபெற்ற விசேட பிரார்த்தனைக் கூட்டத்துடன் அன்றைய முழு நாள் விழா இனிதாய் நிறைவெய்தியது.

## பிரியாவிடை

தொண்டரணியின் ஸ்தாபகர்களில் ஒருவரானவரும், தொண்டரணியின் தானைத் தலைவராகவும் கடமை ஆற்றி வந்த திரு. சு. லிங்கேஸ்வரன் அவர்கள் கடந்த 3-2-70 ல் தொழில் முன்னேற்றத்திற்காகவும், உயர் கல்வி பயில்வதற்காகவும் லண்டன் மாநகரம் சென்ருர். அவரது சேவைகள் எமது தொண்டரணியின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. அவருக்கு எமது தொண்டரணியின் ஆதரவில் 1–2–70 ல் எமது தொண்டரணித் தளபதி திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களது இல்லத்தில் ஒரு பிரியாவிடைக்கூட்டத்தை நடாத்தியும், 3-2-70ல் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஒரு பிரியாவிடையும் அளித்து கௌரவித்தோம், அவர் இன்றும் லண்டன் மாநகரில் இருந்து கொண்டு எமது தொண்டரணியின் வளர்ச்சிக்கு பல சிறந்த திட்டங்கள், அறிவுரைகள் யாவற்றையும் கடித மூலம் எம்முடன் தொடர்பு கொண்டு வருகின்ருர்.

## வரவேற்புபசாரம்

தொண்டரணியின் காவலர்களில் ஒருவரான சைவ இளவல் சி. திருநாவுக்கரசு அவர்களுடைய திருமண வைபவத்தில் கலந்து வாழ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துகள் வழங்கியதுடன், அவருக்கும் அவரது பாரியாருக்கும் தொண்டரணியின் ஆதரவில் 18-7-69ல் ஒரு வரவேற்புபசாரத்தை கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் அளித்து கௌரவித்தோம். அத்துடன் தொண்டரணியின் தளபதி திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களுடைய திருமண வைபவத்தில் கலந்து வாழ்த்துகள் வழங்கியதுடன் அவரையும் அவரது பாரியாரையும் அழைத்து தொண்டரணியின் ஆதரவில் கொம்பனித்தெரு, இளம் கிறிஸ்தவ மகளிர் யுபிலி மண்டபத்தில் 17-12-69 ல் ஒரு பிரமாண்டமான வரவேற்புபசாரத்தை நடாத்தி அவர் கடந்த காலத்தில் எம் தாய் சங்கத்திற்கும், தொண்டரணிக்கும் ஆற்றிய சேவைகளை பாராட்டி நன்றி செலுத்தி கௌரவித்தோம்.

### பணிமனை

இற்றை வரை காலமும் கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலே எமது அணியின் பணிமனையாகவும் எமது தாய்ச் சங்கத்தின் பணிமனையாகவும் இருந்து வருகின்றது. இருந்த போதிலும் எதிர்காலத்தில் எமது சங்கத்தின்—அணியின் பணிகள் மென் மேலும் விருத்தியடைய எமது சங்கத்திற்கு—அணிக்கு ஒரு தனிமையான நிரந்தரமான பணிமனை இருப்பது அவசியம். எமது சங்கத்தின்—அணியின் பணிமனைக்கென நிரந்தரமான ஒரு கட்டிடம் ஒன்று கொம்பனித்தெருவிலே கிடைக்கக் கூடியதான வழி வகைகளை மேற்கொண்டு வருகிறோம். இம்முயற்சியில் சைவப் பெருமக்களின் பூரண ஆதரவு எமக்கு கிடைக்கும் என்பது திண்ணம். எமக்கென ஒரு கட்டடம் கிடைக்கப் பெற்றதும் சங்கம் ஒரு சக்தி வாய்ந்த நிறுவனமாக வளர்ச்சியுற வாய்ப்பேற்படும். சைவ முன்னேற்றச் சங்கம் தனக்கென ஓர் பணிமனை பெற்று பல்கிப் பெருகி பணிகள் பல புரிந்து தன்னிறைவுப் பெற்றுத் திகழ சைவப் பெருமக்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் உங்களால் இயன்ற பண உதவி புரியுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

### மாவட்ட அணிகள்

சைவத் தமிழ்ப் பெரியார்கள் பலரின் வேண்டுகோட்கும் அறிவுரைக்கும் இணங்க எமது இயக்கத்தை தலைநகரில் பரவலாக செயல்பட திட்டமிட்டுள்ளோம். இதன் பிரகாரம் தற்போதைக்கு கொம்பனித்தெரு, கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை, நாராகேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, ஆகிய இடங்களில் எமது அணியின் மாவட்டச் செயலகங்கள் அமைத்துள்ளோம். ஒவ்வோர் மாவட்டத்திற்கும் இரு இணைச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கள் மாவட்டங்கள் தோறும் சங்கத்தின்—அணியின் பணிகளைப் பரப்புவதோடு அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் இல்லங்களில் நடைபெறும் நன்மை தீமைகளில் பங்கு கொள்வதோடு உடனுக்குடன் தங்கள் மாவட்டத்திலுள்ள முக்கிய விடயங்கள் யாவற்றையும் சங்கத்தின் பொதுச் செயலாளருக்கும் அணியின் செயலாளருக்கும் அறிவித்து ஆவன செய்ய மேற்க்கொள்வார்கள்.

### நன்றியுரை

இத் தொண்டரணியின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் போது கடந்த ஆண்டில் இத் தொண்டரணியின் தோற்றத்திற்கு காரணமாக இருந்த அன்பர்கள் திருவாளர்கள் க. பாலசுப்பிரமணியம், சு. லிங்கேஸ்வரன், கா. சிவகுருநாதன், செல்வி. இந்திராணி கண்ணலிங்கம் மற்றும் எமது தொண்டரணிக் காவலர்கள் கலாநிதி ஸ்ரீபவன் ஸ்ரீ ஸ்கந்தராஜா, திரு. கு. குருசாமி, திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை திரு. சி. திருநாவுக்கரசு, செல்வி. சற்சொரூபவதி நாதன் ஆகியோருக்கு எம் மனம் நிறைந்த நன்றியை முதற் கண் சமர்ப்பிக்கின்றேன். அடுத்த படியாக கடமையுணர்வுடன் செயலாற்றி வரும் தொண்டர்கள் யாபேருக்கும், தொண்டரணியின் நிர்வாகத்தை திறம்பட நடாத்த அறிவுரைகள், வழங்கிய தளபதி. திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், தானைத் தலைவர்கள் திரு. சு. லிங்கேஸ்வரன், திரு ச. கனகசபாபதி ஆகியோருக்கும், உதவி அணிச் செயலாளர்களாக கடமை புரிந்த திரு. ச. மு. விவேகானந்தன், செல்வி. முத்துலட்சுமி பெருமாள் ஆகியோருக்கும், அணிப் பொருளாளர் செல்வி. இந்திராணி கண்ணலிங்கம் அவர்களுக்கும், உதவி அணிப் பொருளாளர் திரு. தி. செல்லத்துரை அவர்களுக்கும் எம் பசுமையான நன்றிகளை பணிவுடன் சமர்பித்து, இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாபேருடைய கடமையுணர்வான கட்டுப்பாடு, கண்ணியம் நிறைந்த சேவையே இன்று தொண்டரணியின் சிறந்த வளர்ச்சிக்கு உதவி புரிந்தது எனக் கூறிக்கடந்த காலங்களில் இத்தொண்டரணியின் முன்னேற்றத்திற்கு ஆதரவு நல்கி வந்த கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தா சபையினருக்கு எம் உளங்கனிந்த நன்றிகளை சமர்பித்து எமது அணியின் கூட்டங்களை தங்கள் இல்லங்களில் நடாத்த உதவிய திருவாளர்கள். A. இராஜரட்ணம், K. சிவசாமி, S. பெருமாள் ஆகியோருக்கும் எமது நன்றியைக் கூறி தொண்டரணியின் வளர்ச்சிக்கு ஆதரவு நல்கி வரும் சைவப் பெருமக்கள் யாபேருக்கும் என்றும் மறவா நன்றியுடைய கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத் தொண்டரணியின் சார்பாக மனம் நிறைந்த நன்றியறிதலை தாழ்மையுடன் சமர்ப்பிக்கின்றோம்.

நிறைவு

21—7—1970 செவ்வாய்க்கிழமை தொண்டரணிக்கு முதலாவது பிறந்த தினமாகும். இவ் மகிழ்ச்சிகரமான தினத்தை தொண்டரணி உறுப்பினர்கள், தாய்ச் சங்கத்தாருடன்சேர்ந்து தொண்டரணிச் செயலாளர் அவர்களுடைய இல்லத்தில் "விசேட பிரார்த்தனைக் கூட்டத்தை" ஏற்பாடு செய்து கொண்டாடினோம். இன்று 1—8—70 ல் "தொண்டரணி" யின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவை மிகவும் விமரிசையாக கொம்பனித்தெரு இளம் கிறிஸ்தவ மகளிர் யுபிலி மண்டபத்தில் சுவாமி விபுலானந்தர் அரங்கில் கொண்டாட திருவருள் பாலித்துள்ளது. இவ்விழா இனிதுற நடைபெற கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருள் துணை வேண்டுகின்றோம்.

வணக்கம்.

131, கியூ வீதி,
கொழும்பு 2.
1—8—70

என்றும் தங்கள் சேவையில்
வ. இ. இராமநாதன்.
(கௌரவ அணிச் செயலாளர்)



## விசேட ஒழுங்கு

கொழும்பு, கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத் "தொண்டரணி" யின் ஆதரவில் நடைபெறும் இந் நிகழ்ச்சிகள் யாவும், இலங்கை அரசினர் புகைப்படப்பிரிவினரால் ஒளிப்பதிவு செய்யப்பட்டு திரையில் வெளியிடப்படும். அரசினர் புகைப்படப்பிரிவினருக்கு எமது நன்றி.

சை. மு. ச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நன்றிகள்

எமது அன்பு அழைப்பை ஏற்று இவ்விழாவை தலைமை தாங்கி நடாத்திய சைவப்பெரியார் திரு. செ. இரங்கநாதன் Q.C. அவர்கட்கும் பிரதம அதிதியாக அன்புடன் கலந்துகொண்ட மாண்புமிகு தபால் தந்தி சேவை அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் அவர்கட்கும் எமது அணியின் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

மேலும் தங்கள் காலத்தையும் — நேரத்தையும் பொருட்படுத்தாது விழாவிற்கு வருகை தந்து சிறப்புப் பேருரை வழங்கிய திரு. மு. சிவராசா அவர்கட்கும் திருமதி. பாலம் லக்ஷ்மணன் B.A. அவர்கட்கும் மற்றும் விழாவில் கலந்து சிறப்பித்த அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

இச் சிறப்பிதழைச் சிறப்புடன் அச்சிட்டுத் தந்த அமிற்றி அச்சக உரிமையாளர் திரு. எஸ். கே. அருட்பிரகாசம் அவர்கட்கும் அமிற்றி அச்சக அன்பு ஊழியர்கட்கும், எமது அணியின் பணியை உணர்ந்து விளம்பரம் தந்துதவிய வணிகப் பெருமக்கட்கும் விளம்பரம் சேகரிக்க உறுதுணையாய் இருந்த தொண்டன் திரு தி. நவநீதன் அவர்கட்கும் மற்றும் விழாவை திறம்பட நடாத்த உழைத்த தொண்டர்கள் அனைவருக்கும் அணியின் சார்பில் என்றும் மறவாத நன்றியைக் கூறுகின்றோம்.

வணக்கம்

ச. மு. விவேகானந்தன்
பெ. முத்துலட்சுமி
( கௌரவ உதவி அணிச் செயலாளர்கள் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from

# S. K. M. JEWELLERY MART

BUYERS AND SELLERS OF GOLD & SILVER JEWELLERIES

Orders will be executed in time

160 A, SEA STREET — COLOMBO 11.

## எஸ். கே. எம். ஜுவலரி மாட்

பவுன், பொன், வெள்ளி நகைகள் குறித்த தவணையில்

நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.

பவுன், பொன், வெள்ளி நகைகள் நியாயமான விலைக்கு வாங்கப்படும்.

160 A, செட்டியார் தெரு, — கொழும்பு 11.

With best compliments
from

## RAJESWARI PRESS

PRINTERS, PUBLISHERS, CARTON
AND
RUBBER STAMP MAKERS

T'phone : **29639** 16, 18, Prince Street,
T'grams : **"NEW PRINT"** Colombo 11.

Remember

FOR
ANY CATERING SERVICE
&
PARTIES

PLEASE CONTACT

## HOTEL METROPOLE

30, QUEEN STREET, COLOMBO 1.

Telephone : 21066

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For your

# ELECTRICAL

requirements

*Contact*

# DORAISONS

46, 48, Bankshall Street,
COLOMBO 11.

**Telephone: 24877**



## EASTERN HEMISPHERE TRADING COMPANY

Consultants and Designers of safety systems and Manufactures of safety Equipments.

*Telephone :*
**25900**

**258, Union Place,**
**Colombo 2**
**Ceylon.**

*With best Compliments*

*from*

# A. K. GOLD HOUSE

**JEWELLERS & PAWN BROKERS**

60, Sea Street,
Colombo 11.

Telephone: **25384** Ext: **3 Lines**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A MITY

PRINTERS

**FOR HIGH**
**QUALITY**
**COLOUR PRINTING**

- *Modern Type Faces*
- *Competitive Rates*
- *Expeditious Work*
- *Reliable Service*
- *Curteous Attention*

*71 Justice Akbar Mawatha*
*Colombo 2*

*Telephone 20192*


Printed at Amity Printers, 71, Justice Akbar Mawatha, Colombo 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org